நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை –28.

**சுற்றறிக்கை**

**ந.க.எண் :** 16341 /2021/இ1, **நாள் :** 17.08.2021

**பொருள் : –** ஒப்பந்தபணிகள் – மாநகராட்சி / நகராட்சிகளில் ஒப்பந்தபுள்ளிகள் – முடிவடைந்த பணிகளுக்கு தொகை வழங்குவது குறித்து சில வழிமுறைகள் தெரிவிப்பது – சம்மந்தமாக.

*********

மாநகராட்சி / நகராட்சிகளில் ஒப்பந்தபணிகளை செய்யும் ஒப்பந்ததாரர்களின் பணி முடிவடைந்ததும் அவர்களின் பணி பட்டியல் தொகையை செய்த பணிக்கு அளவு மேற்கொண்டு பட்டியல் தொகை வழங்குவது குறித்து கீழ்கண்ட வழிமுறைகள் தெரிவிக்கப்படுகிறது.

1. மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள் ஒப்பந்ததாரரின் கூட்டம் ஒன்றினை கூட்டி தகுந்த அறிவுரை வழங்க வேண்டும்.
2. அளவு புத்தகங்கள் மற்றும் சம்மந்தப்பட்ட மந்தன ஏடுகளை பாதுகாக்க வேண்டும் என இளநிலை பொறியாளர் / உதவி பொறியாளர்களை அறிவுறுத்தி எக்காரணம் கொண்டும் அளவு புத்தகங்களையும் மந்தன ஏடுகளையும் ஒப்பந்ததாரர்கள் வசம் கொடுக்கக் கூடாது என ஆணையர்கள் ஆணை வழங்க தெரிவிக்கப்படுகிறது. மேலும் இதனை மீறும் பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தப்படுகிறது.
3. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தபணி முடிக்கப்படும் தேதியின் அடிப்படையில் முதுநிலை (seniority) அடிப்படையில் நகராட்சி தகவல் பலகையில் வெளியிட்டு முடிக்கப்பட்ட பணியின் பெயர் , முடிக்கப்பட்ட நாள் ஆகியவற்றை அதில் தெரிவிக்க வேண்டும்.
4. மாநகராட்சி / நகராட்சிகளில் நடைபெற்று வரும் பல்வேறு உட்கட்டமைப்பு மற்றும் சாலை பணிகளை ஒப்பந்த காலத்துக்குள் தரமான முறையில் பணிகளை முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.
5. பணிகள் முடிய முடிய ஒப்பந்ததாருக்கு உரிய வழிமுறையின்படி அளவு புத்தகத்தில் பதிவு செய்து பட்டியல் தொகை பகுதி வாரியாக வழங்கப்படாமல் காலதாமதம் ஏற்படுவதாக பல்வேறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து புகார் மனுக்கள் வரப்படுகிறது.

Scanned with CamScanner

6. புகார் மனுக்களை தவிர்க்கும் பொருட்டு அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் நடைபெற்று வரும் திட்ட பணிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கு அவ்வப்போது பணிகளின் அளவீட்டினை அளவு புத்தகத்தில் பதிவிட்டு மேல் அதிகாரிகளின் ஒப்புதல் பெறப்பட்டு பணி முடிந்த இரு வாரங்களுக்குள் உரிய பட்டியல் தொகையினை எவ்வித தொய்வும் இன்றி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் . இதில் ஏதேனும் குறைபாடு ஏற்படின் அதற்கு காரணமான பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. பொறியியல் பிரிவில் பட்டியல் தொகை சமர்ப்பித்த பின் கணக்கர் மற்றும் மேலாளர் TDS ,GST கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி மற்றும் இதர பிடித்தங்களை சரிபார்த்து அன்றே ஆணையருக்கு அனுப்ப வேண்டும். ஆணையர் பட்டியல் தொகையினை உடன் விடுவிக்க வேண்டும். தொகை பற்றாக்குறையாக இருந்தால் பட்டியல் தயாரித்து முதுநிலையின் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்க வேண்டும்.

8. பொறியியல் பிரிவில் பட்டியல் தொகை விபரம் சமர்ப்பித்தபின் குறிப்பிட்ட கால அளவுக்குள் தொகை வழங்கப்படவில்லை என்ற விவரம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு தெரிய வந்தால் அதற்கு காரணமான ஆணையர் / அலுவலக மேலாளர் / கணக்கர் உள்ளிட்ட சம்மந்தப்பட்ட அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்பளிப்பு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

19/8/21

**நகராட்சி நிர்வாக இயக்குநர்**

19/8/2021

**பெறுநர்**

1. அனைத்து மாநகராட்சி ஆணையாளர்கள்
2. அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்
3. அனைத்து நகராட்சி ஆணையர்கள்

**நகல் :**

1. தலைமைப் பொறியாளர்
2. கண்காணிப்புப் பொறியாளர்

Scanned with CamScanner